எல்லை இல்லா துயர் சுமந்த இன்னும்
எத்தனை நாள் நாங்கள் அழ எல்லை
இல்லா துயர் சுமந்த இன்னும் எத்தனை நாள் நாங்கள் அழ
கல்லறையே கதவு திற எங்கள் கண்மணிகள் உயிர்த்து எழ

எல்லை இல்லா துயர் சுமந்த இன்னும்
எத்தனை நாள் நாங்கள் அழ

பா லுட்டி வளர்த்த அன்னை பதற  நஞ்சை குடித்தவர்கள்
தாய் நாட்டின் உயிர் காக்க தம் உயிரை முடித்தவர்கள்
நாடெல்லாம் என்றும்   அவர் நடந்த கால் தடம் இருக்கு
ஒடோடி திரிந்த அவர் உடல் இல்லை படம் இருக்கு
நல்ல நாள் விடுதலை நாள் நாளை இங்கு பூக்க வேண்டும்
கல்லறையே கதவு திற வீரர் அதை பார்க்க வேண்டும்

எல்லை இல்லா துயர் சுமந்த இன்னும் எத்தனை நாள் நாங்கள் அழ

தமிழர் கண்ணீர் துடைக்க களம் நோக்கி வந்தாரே
இமை மூடி இன்றவரே கண்ணீரை தந்தாரே
உயிர் நீத்த மாவீரர் வலிமை போல் உவமை இல்லை
துயர் தாங்க எங்களுக்கும் துளி கூட வலிமை இல்லை
நல்ல நாள் விடுதலை நாள் நாளை இங்கு பூக்க வேண்டும்
கல்லறையே கதவை திற வீரர் அதை பார்க்க வேண்டும்

எல்லை இல்லா துயர் சுமந்த இன்னும் எத்தனை நாள் நாங்கள் அழ
கல்லறையே கதவு திற எங்கள் கண்மணிகள் உயிர்த்து எழ
எல்லை இல்லா துயர் சுமந்த இன்னும் எத்தனை நாள் நாங்கள் அழ